[2012 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

130—

குடமுழுக்கு

***612—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலின் உபகோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு கடைசியாக 23—1—1984 அன்று திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டது. குடமுழுக்கு நடைபெற்று 28 ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் சரியான பராமரிப்பு இல்லாததால், திருக்கோயிலில் இராஜகோபுரம் உட்பட அனைத்து சன்னதிகளும் மிகவும் சிதிலமுற்ற நிலையில் உள்ளன. எனவே, சிதிலமுற்ற இத்திருக்கோயிலை இடித்துவிட்டு புதிதாக திருக்கோயிலைக் கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இராஜகோபுரம் கட்டும் பணி, சோபன மண்டபம் கட்டும் பணி, மடப்பள்ளி கட்டும் பணி மற்றும் இதர பணிகளுக்காக ரூபாய் 78.50 இலட்சம் மதிப்பீட்டில் முதன்மை திருக்கோயிலின் நிதியின்மூலம் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10—55

மேலும், ரூபாய் 25.50 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணிகள் உபயதாரர்கள்மூலம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கான மதிப்பீட்டினைத் தயாரித்து, உரிய அங்கீகாரத்துடன் அனைத்துப் பணிகளையும் முழுமையாக முடித்து, விரைவில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இத்திருக்கோயில் குடமுழுக்கு நடத்தப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலினுடைய துணைக் கோயில்தான், மேட்டுப்பாளையம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில். இக்கோயில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு சிதிலமடைந்து எவ்விதமான திருப்பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில் இந்தக் கோயிலினுடைய திருப்பணிகளை மேற்கொள்ளவேண்டுமென்று இந்த அவையிலே கேள்வி எழுப்பினேன். அதற்கு எந்தவிதமான பதிலும் இல்லை. இன்று தாயுள்ளம் படைத்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதியாண்டிலேயே கடந்த 10 மாத காலத்தில் 1,006 திருக்கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்து, பக்தர்கள் மனம் குளிர வைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த அடிப்படையிலே மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு இன்று ரூபாய் 76 இலட்சம் அளவிலே திருப்பணிகள் மேற்கொள்ள ஆணை பிறப்பித்த தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி, இந்தத் திருப்பணிகளை விரைந்து முடிப்பதற்கு அறிவித்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. விதி 110—ன்கீழ் அறிக்கை

பொறியியல் கல்லூரிகள், பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் கலை—அறிவியல் கல்லூரிகள் துவக்குவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை அளிக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் வீறுபெற்று, உலக அரங்கில் தனிச் சிறப்புடன் விளங்கவேண்டும் என்றால், உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி வளர்ச்சி பெறுதல் வேண்டும். ஒரு நாடு உயர் நிலையடைய உயர் கல்வி, தொழிற்கல்வி இரண்டும் இன்றியமையாதவை. மாநிலத்தில் உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி வளர்ச்சியடைந்தால் மட்டுமே புதிய புதிய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் போன்றவை வளர்ச்சிபெறும். உயர் நிலைக் கல்வியால்தான் நாட்டின் வளர்ச்சியை உருவாக்க முடியும். அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைவது உயர் கல்வியே. இத்தகைய உயர் கல்வியின் வளர்ச்சிக்கும், தொழிற்கல்வியின் வளர்ச்சிக்கும் எனது அரசு பல முன்னோடியான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.*

பள்ளிப் படிப்பிற்குப் பிறகு, குறிப்பாக, கிராமப்புற மாணவ, மாணவியர்கள், தங்கள் கல்வியினை நிறுத்திவிடாமல் தொடர்ந்து உயர் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில், எனது அரசு பொறியியல், மருத்துவம், கலை மற்றும் அறிவியல் கல்விகளுக்கான கல்லூரிகளை தமிழகத்தின் பல மாவட்டங்களில் துவக்கி வருகிறது. அந்தவகையில், 2011—2012 ஆம் ஆண்டில் 11 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன.